1971 ஜூலை 26]

வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அரசு கடன்.

* 445 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாபேட்டை நகராட்சியின் நிதி பற்றாக்குறையைப் போக்கச் சென்ற ஆண்டு எவ்வளவு கடன் அரசால் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டு, அதாவது 1970–71 வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அதன் நிதி பற்றாக்குறையைப் போக்க அரசு ரூ. 15,000 கடனாக வழங்கியது.

Demands day organised by Gramasevaks.

*446. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the "Demands Day" organised by the Gramasevaks about February, 1971; and

(b) if so, the action taken on the demands?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஊர்நல உதவியாளர்கள் (Gramasevaks) சம்பள வீதத்தை மீண்டும் மாற்றியமைப்பதற்கு, தமிழ்நாடு ஊர்நல உதவியாளர்கள் சங்க கோரிக்கைகளை அரசு பரிசீலித்துள்ளது. இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரைத்த சம்பள வீதங்களே போதுமானவை என்றும், மாற்றம் எதுவும் தேவையில்லை என்றும் அரசு கருதுகிறது.

சென்னை—அரக்கோணம் புறநகர்ப் பகுதி

* 447 வினா—திரு. என். எஸ். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் அரக்கோணம் வரை உள்ள பகுதியை சப்-அர்பன் பகுதியாகச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னை மாநகர பெரும் திட்டத்தின் பொருட்டு அரக்கோணத்தை சென்னை தலைநகருக்குரிய (மெட்ரோபாலிடன்) பரப்பில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி இருக்குமானால் அதற்கு விடை அரக்கோணம் நகர அமைப்பு இயக்குநரால் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தின் பொருட்டு வரையப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளது. அம்மாதிரி சென்னை தலைநகருக்காக வரையறுக்கப்பட்ட பகுதி 456 சதுர மைல் பரப்பை சென்னை—செங்கை

மாவட்டங்களில் கொண்டுள்ளது. அது மேற்கே திருநின்றவூர் வரை எட்டியுள்ளது. அதற்கு அப்பாற்பட்டுள்ள அரக்கோணம் இதில் இடம் பெறவில்லை.

திருப்பூர் நகரமைப்புத் திட்டம்.

*** 448 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் டவுன்-பிளானிங் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்று புகார் ஏதேனும் 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) உறுப்பினர் தமது விண்ணப்பத்தில், "திருப்பூர் நகரமைப்புத் திட்டம் 3-ஐ உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இத் திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது. இத் திட்டத்தில் உத்தேசித் துள்ள சில சாலைகளுக்குத் தேவையான நிலங்கள் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு சாலைகளும் போடப்பட்டு விட்டன. கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள இடங்களில் அமைந்திருக்கும் சிறிய அகலமுள்ள சாலைகளை அகலப்படுத்துவதற்குத் தேவையான நிலங் களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகர மன்றத்தின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அதற்காக அரசாங்கம் அந்த நில ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னாலே நகரசபையே பொறுப்பேற்று அந்தக் காரியத்தைச் செய்து, நிலத்தை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்று கூறப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நகர மன்றத்திற்கு ஏற்கெனவே ரூ. 76,000 கடன் அளிக்கப்பட்டது. திட்டத்திற்குத் தேவையான நிலங்கள் ரூ. 75,246 செலவில் நகர மன்றமே ஆர்ஜிதம் செய்து இருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் இன்னின்ன பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு ஆங்காங்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் கீழ் சில சாலைகள் அகலப்படுத்துவதற்கான வேலைகள் எஞ்சியுள்ளன. இந்தச் சாலைகள் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள சிறிய சாலைகளாகும். அச் சாலைகளை அகலப்படுத்து வதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகராட்சி மன்றம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதாகக் கூறப் படுகிறது. ஆர்ஜிதம் செய்வதற்காக ஆகும் பெரும் தொகையை, நகராட்சி ஏற்க இயலுமா என்று கோவை மாவட்ட ஆட்சித்